உ
சிவமயம்



நயினா தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**திருகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி தேவஸ்தான**
**பிரதம குரு காலஞ்சென்ற**
**சிவஸ்ரீ பூர்ணானந்த சிவசுப்ரமணியக் குருக்களின்**
**அன்பு மனைவி**

## லலிதாம்பாள் அம்மா

**அவர்களின்**

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவசுப்பிரமணியக்குருக்கள் லலிதாம்பாள் அம்மா அவர்கள்



## திதி வெண்பா

சீர்நிறை தாரண சித்திரை பூர்வ ஏகாதசியில்
சிவசுப்ரமணியக்குருக்கள் லலிதாம்பாள் அம்மா
இவ்வுலக வாழ்விலிருந்து நீங்கி
முருகன் மலர்ப்பாதம் சேர்ந்தார்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 24 - 04 - 1924 | 30 - 04 - 2004 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவி
சிவசுப்ரமணியக்குருக்கள்
லலிதாம்பாள் அம்மா அவர்கள்
இறைபதம் எய்தியமை குறித்து
இம்மலரை அவர் முன் சமர்ப்பித்து
அவர் தம் நினைவுகள் என்றும் இருக்க
உங்கள் கரங்களில் வழங்குகிறோம்
முருகனின் மலர் பாதங்களையே பணிந்து
இறைபணியுடன் இல்லறம் நடாத்தி
நன் மக்களாய் எமை வளர்த்து
பண்புடன் பாங்காய் வாழவைத்து
அனைவர்க்கும் அறிவுரைகூறி
நன்னெறியில் வாழ்ந்து
இறைபதம் சேர்ந்த அவரை நினைந்து
அவர்க்காய் பிரார்த்திப்போம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்முதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திக ழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரு மூஷிக வாகன

இப்பொழுதென்னை ஆட் கொளவேண்டித்
தாயாய் யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல் ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தேன் உளந்தனிற்புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிகு பொருளென
வாட வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத் தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குமிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்தே
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவீ லுணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழுகனலைக்
காலா லெழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனி யக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருந்தி முத்தி இனி தெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்று இடம் என்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்

கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தினரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலைய றிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தென்னை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோணேசர் பதிகம்

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்தில் மேவும் சரவணன்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர ஹணபவ வருக வருக !
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதமும் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும்வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் வேலவர் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்னகை யிரண்டும் முரண்வேல் காக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபவ பேய்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ராங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப்பித்தம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
திரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் ரெண்மர் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

அன்னையின் அருள் செழிக்கும் நயினையம்பதியில் சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் செல்லம்மா தம்பதியர்க்கு 06-04-1924 அன்று பிறந்தார். தனது கல்வியை நயினையிலேயே மேற்கொண்டார் 1939ம் ஆண்டில் திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் பிரதமகுரு பூரணானந்த சிவசுப்ரமணியக் குருக்களை திருமணம் புரிந்து இல்வாழ்க்கையில் இணைந்தார்.

இவர்களின் இனிய இல்வாழ்வின் பயனாக சுரானந் தேஸ்வரசர்மா, சச்சிதானந்தக் குருக்கள், சியாமளேஸ்வரி, மனோகரசர்மா, பிரபாகரசர்மா, ஹேமமாலினி ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தார். பிள்ளைகளிற்கு கல்வியை போதித்து திருமணவயதினை அடைந்த போது அவர்களிற்கு திருமணத்தை நடத்தி வசந்த கோகிலம், சுந்தராம்பாள், ஜெகநாதக்குருக்கள் சாருகேசி, சிவபாலசர்மா ஆகியோரை மருமக்களாக பெற்றார். அவர்களை வழிப்படுத்தி வாழவைத்து பேரப்பிள்ளைகளாக சுதாகரன், ஜெயபாரதி சிவகரன், யசஸ்கரன், அபர்ணா, உமாகரன், பிரகதீஸ்வரி, ஜெயகாந்தன், ராஜசுந்தர், பிரியங்கா, ஆதித்யா,லாவண்யா, சங்கர் ஆகியோரை பெற்றார். ஹரிணியை பூட்டியாக அடைந்து பெருமகிழ்ச்சி கொண்டார். தனது உடன்பிறந்தவர்களான சூளிகாம்பாள், பரமேஸ்வரக் குருக்கள், பாலசுந்தரக்குருக்கள், பத்மாவதி ஆகியோர் மீதும் பெரும் பாசம் கொண்டிருந்தார். 1975ல் கணவர் சிவபதம் அடைந்த போது பெருந்துயர் கொண்டார். அதன் பின் இறைசேவையில் அதிகம் ஈடுபட்டு வந்தார்.

30-04-2004 அன்று இறைவனின் திருவடியினை அடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானது பாதத்தை தொழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவேல்

**வேல்முருகப் பெருமானின் படைகளில் மிக முக்கியமான தொன்று. இப்படையை உடையவர் ஆதலால் பெருமான் வேலாயுதம் என்றழைக்கப் படுகின்றார். தேவர்களைக் காத்து அசுரர்களை அழிப்பதற்காகச் சிவபெருமானால் மந்திரத்துடன் அளிக்கப்பட்டதால் இது மந்திர வேல் ஆகும். இதை முருகப்பெருமானின் ஞானச்சக்தி என்பர். எல்லாவற்றையும் வெல்வது ஞானம் மட்டுமே ஆகும். ஞானம் என்பதற்கு அறிவு எனப் பொருளுமுண்டு. அறிவுக்கு ஆழம், அகலம், கூர்மை என மூன்று இலக்கணமுண்டு. வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி அகலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் உள்ளது. வெற்றியினைத் தருவது வேல், வேலின் ஆற்றலுக்கு இணையான ஆயுதம் வேறு எதுவுமில்லை. நூறுகோடிக்கணக்கான உதய சூரியர்களின் ஒளிக்கு நிகரானது வேலின் ஒளியாகும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களாகிய சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய அசுரர்களை அழித்து மக்களுக்கும் தேவர்களுக்கும் நலம்புரிந்தது ஞானவேல் எனவே இவ்வேலை வணங்கினால் சகல மலங்களும் அழிந்து எல்லா ஞானமும், நலங்களும் கிட்டும். இதையே சான்றோர் "வேலை வணங்கவது எமக்கு வேலை" என்கின்றனர். அசுரர்களை வென்றுவர உமாதேவி தைப்பூசத்தன்று முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்து அனுப்பியதாக புராணம் கூறும். எனவே தான் தைப்பூசம் வேலனுக்கு உகந்த நாளாகின்றது. இவ்விழா சகல முருகன் கோயில்களில் இன்றும் வெகுசிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப் பெருமானின் தேவியர்கள்

## (தத்துவ விளக்கம்)

ஞானரூபமான முருகனுக்கு இச்சா, கிரியா என இரு சக்திகள் உண்டு இச்சையைத் தூண்டுபவள் வள்ளி, கிரிஜையைத் தூண்டுபவள் தேவசேனாதேவி, இவ்விருசக்திகளுடன் காட்சிதரும் முருகப்பெருமானை வள்ளி தேவசேனா சமேதசுப்பிரமணியம் என்பர். யாகாதி கிரிஜைகளை செய்வது கரும மார்க்கம். இது தெய்வ யானை தேவியின் கிரிஜாவழி குறமகளாகப் பிறந்த வள்ளிதேவி ஏதும் செய்யத் தெரியாமல் முருகனையே எண்ணி பக்தி கொண்டு இருப்பது இச்சைவழி. இந்த இரு வழிகளிலும் ஞானத்தை அடையலாம். கிரஜாவழி பக்தர்கள் இறைவனைத் தேடிச் செல்லும் தத்துவம். இதை மார்க்கட நியாயம் என்பர். அதாவது குரங்குக்குட்டி தன் பாதுகாப்புக்காக தன் தாயின் வயிற்றை க் கட்டிப் பிடிப்பது போன்றது. இச்சாவழி இறைவனே பக்தர்களை நாடிச்செல்லும் வழி. இதை மார்ஜாலநியாயம் என்பர். அதாவது தாய்ப்பூனை தன் குட்டிகளை கௌவிச் சென்று பாதுகாப்பது போன்றது முருகப் பெருமான் தன்னை வழிபடும் சகலநிலைகளிலும் உள்ள பக்தர்களுக்கு அருள்புரிவார் என்பதை விளக்கும் தத்துவமே வள்ளி தெய்வ சேனா திருமணமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப் பெருமானின் திருநாமங்கள்

முருகப் பெருமானின் திருப்பெயர்களை ஆத்மார்த்தமாகச் செபிப்பவர்களுக்கு மறுபிறப்பு இல்லை. வறுமையில் வாடார் என்று கந்தரலங்காரம் கூறுகின்றது கந்தனின் திருநாமம் பிரமா எழுதிய எழுத்தையும் அதாவது விதியை அழிக்கும் என கந்தரந்தாதி செப்புகின்றது. பிரம்மா என் தலைமேல் எழுதிய எழுத்து (விதி எழுத்து) முருகப் பெருமானின் திருவடி பட்டு அழிந்தது. "கால் பட்ட சித்தத்திங் கென்றலை மேலையன் கையெழுத்தே..." எனக் கந்தலங்காரம் போற்றுகின்றது. முருகன் நாமத்தை சொல்லும் நாவில் அவன் திருவிளையாடல் செய்கின்றான் முருகன் என்கின்ற ஞான விளக்கை நம் இருதயத்தில் ஏற்றி வைத்தால் நம் இருதயம் இரவு பகலற்ற ஒளிமயம் ஆகிவிடும். ஒருநிமிட நேரம் திரிகரண சுத்தியுடன் முருகப் பெருமானின் நாமத்தை ஓதி வழிபட்டு அகக் கண்ணைத் திறந்தால், ஞான ஒளியைக் காணலாம். இதற்கு அருள்மிக்க முருகப் பெருமானின் சில திருநாமங்களையும் அதன் பெயர்காரணங்களையும் இங்கு காண்போம்.

01. சரவணன் - சரவணப் பொய்கையில் வளர்ந்தவன்
02. காங்கேயன் - கங்கை நதியால் சரவணப் பொய்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டவன்.
03. கார்த்திகேயன் - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்.
04. குகன் - பக்தர்களின் இருதயமான குகையில் வசிப்பவன்.
05. ஸ்கந்தன் - சிவஜோதியிலிருந்து பொறிகளாகப் புறப்பட்டவன்.
06. ஷண்முகன் - ஆறுமுகத்தை உடையவன்.
07. சுவாமிநாதன் - தந்தை சுவாமிக்கு உபதேசம் செய்தவன்.
08. சிவகுரு - சிவனுக்குக் குருவாக இருந்து உபதேசம் செய்தவன்.
09. கடம்பன் - கடம்பமாலை விரும்பியணிபவன்
10. தணிகாசலம் - தணிகைமலையில் கோபம் தனிந்து இருப்பவர்
11. பழனி - முருகனே பழமாக இருப்பவர்
12. வரதன் - பக்தர்கள் கேட்கும் வரங்களைக் கொடுப்பவன்
13. வேலன் - சக்திவேலை ஆயுதமாக வைத்திருப்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. குமரன் - என்றும் வாலிபன், இளைஞன்.
15. மருகோன் - விஷ்ணுவின் மருமகன்.
16. அக்கினிப்பூ - ஆறு பொறிகளில் இருந்து உண்டானவன்.
17. கந்தன் - தோள் வலிமைமிக்கவன்
18. முருகன் - அழகன், இளமையானவன்
19. சுப்பிரமணியன் - பிரமத்தில் உதித்தவன்
20. சித்தன் - சித்தியை வழங்குபவன்
21. குருபரன் - ஆசாரியனுக்கு ஆசாரியன்
22. குருநாதன் - குருவாக விளங்குபவன்
23. குமாரசாமி - சிவனின் குமாரன்
24. குன்றெறிந்தோன் - கிரவுஞ்ச மலையை வேலால் பிளந்தவன்
25. செவ்வேள் - சென்னிறம் உடையவன்.
26. சேயோன் - இளமையுடையவன்
27. தேவ சேனாதிபதி - தேவர்களின் தலைவன்.
28. தண்டாயுதபாணி - தண்டத்தை ஆயுதமாக உள்ளவன்.
29. வேலாயுதன் - வேல்படையை ஆயுதமாக உள்ளவன்
30. முத்தையன் - நீரிலே தோன்றும் முத்தைப்போல இயற்கை ஒளியை உடையவன்.
31. சேந்தன் - பூரணமானவன்.
32. விசாகன் - விசாக நட்சத்திரத்தில் தோன்றியவன்.
33. சுவாமி - அகில உள்ளங்களையும் அதில் உள்ள உயிர்களையும் சொந்தமாக உடையவன்.
34. பாவகி - அக்கினியை உடம்பாக உடையவன்.
35. வாகுலேயன் - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்
36. சோமஸ்கந்தன் - சிவன் உமையின் நடுவில் வீற்றிருப்பவன்.
37. சசிவாகனன் - மயில்வாகனன் (சசி - மயில்)
38. அக்னிஜாதர் - அக்கினியில் பிறந்த திருவுருவம்.
39. உமாசுதன் - உமையம்மையின் குமரன்.
40. வரோதயன் - வரத்தால் தோன்றியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறு முகத்தில் அதிபதி நானென்றுங்**
**கூறு சமயக் குருபரன் நானென்றுந்**
**தேறினர் தெற்குத் திரு அம்பலத்துளே**
**வேறின்றி யண்ணல் விளங்கி நின்றானே.**

- திருமந்திரம் -

**பற்பல தலங்களில் பண்பொடு இருந்தாய்**
**பகையிருள் தீர்த்த வடிவேலா**
**கற்பவர் உள்ளம் கனிந்திட இனித்தாய்**
**கண்மணி கனிமொழிக் கதிர்வேலா**
**அற்புதத் தேவா அருகினில் வாவா**
**அறுமுக அதிசய முருகேசா**
**சரவணபவனே சங்கரி மகனே**
**சற்குரு ஜெயஜெய சண்முகனே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி

ஸ்ரீமதி சிவசுப்ரமணியக்கருக்கள் லலிதாம்பாள் அம்மா

அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து

அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி எம்முடன் இருந்து

உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி,

தபால் மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும்

இறுதிகிரியைகளின்

போது நேரில் வந்தவர்களுக்கும் அதற்கான சகல

ஒழுங்குகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்பு

உள்ளங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு

இன்று அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும்

அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்

கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது இதய பூர்வமான

நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நன்றி -

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

இல,179 சுங்கவீதி
வில்லூன்றி கந்தசாமி கோவில்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிநாதக் குருக்கள்

- சூளிகாம்பாள்
- லலிதாம்பாள் + சிவசுப்ரமணியக்குருக்கள்
  - சுரானந்தேஸ்வரசர்மா + வசந்தகோகிலம்
    - சுதாகரசர்மா
    - ஜெயபாரதி + ஜெகநிவாசசர்மா
    - சிவகரசர்மா
  - சச்சிதானந்தக்குருக்கள் + சுந்தராம்பாள்
    - யசஸ்கசர்மா + பிரகதீஸ்வரி
    - ஹரிணி
    - அபர்ணா + இந்துசேகரசர்மா
  - சியாமளேஸ்வரி + ஜெகநாதக்குருக்
    - உமாகரசர்மா
    - பிரகதீஸ்வரி
    - ஜெயகாந்தசர்மா
    - ராஜசுந்தர சர்மா
- பரமேஸ்வரகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் + செல்லம்மா

பரமேஸ்வரகுருக்கள்

பாலசுந்தரக்குருக்கள்

பத்மாவதி

சியாமளேஸ்வரி
+
கநாதக்குருக்கள்

உமாகரசர்மா
பிரகதீஸ்வரி
ஜெயகாந்தசர்மா
ராஜசுந்தர சர்மா

மனோகரசர்மா

பிரபாகரசர்மா
+
சாருகேசி

பிரியங்கா
ஆதித்யா

ஹேமமாலினி
+
சிவபாலசர்மா

லாவண்யா
சங்கர்சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருக்கோணேசர் துணை



தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

(சம்பந்தர் தேவாரம்)

தி/ஸ்ரீ கணேச அச்சகம் 026-2222617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org